நாமக்கல், அறிஞர் அண்ணா அரசுகலைக் கல்லூரி முதல்வரின் செயல்முறைகள்
முன்னிலை—முனைவர் மு. ராஜேஸ்வரி, எம்.எஸ்.சி.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
முதல்வர் (மு.கூ.பொ)

ந.க. எண்— 4435/ ஈ/ 2023 நாள்— 04.07.2025

பொருள்— கல்லூரிக் கல்வித்துறை— அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, நாமக்கல்—நேரடி நியமனம்— தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்— 2022—2023ஆம் ஆண்டுக்கான தொகுதி IV தேர்வில் தெரிவு செய்யப்பட்டு பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி. சு. பிரதீபா, இளநிலை உதவியாளர் என்பாருக்கு பணிவரன் முறை செய்து ஆணையிடல்— தொடர்பாக.

பார்வை—
1. சென்னை—15. கல்லூரி கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள் ந.க. எண்— 35681/ பி1/ 2023, நாள்— 23.11.2023 உடன் பெறப்பட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வணைய செயலர் அவர்களின் கடித எண். 1926/PSD-D2/2023, நாள். 04.09.2023.
2. சென்னை—15. கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்: TNDCE / 4777/ 2025—B1, நாள்— 26.06.2025.

---------------

**ஆணை:**

இக்கல்லூரியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி. சு. பிரதீபா என்பார் பார்வை (1) இல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வணைய செயலர் அவர்களின் கடிதத்தின்படி, தொகுதி— IV, இளநிலை உதவியாளராக தெரிவு செய்யப்பட்டு, சென்னை—15, கல்லூரி கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகளின்படி, இக்கல்லூரியில் இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டு, 24.11.2023 முற்பகல் பணியில் சேர்ந்தார்.

பார்வை(2) ல் காணும் கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட பணியாளர்களது பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணி விதி—10ன் கீழ் நியமன அதிகாரி எனும் முறையில் கல்லூரி முதல்வர் அளவிலேயே பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், இக்கல்லூரியில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டு, இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணியாற்றி வரும் திருமதி சு. பிரதீபா என்பாருக்கு பணியில் சேர்ந்த நாளான 24.11.2023 முற்பகல் முதல், இளநிலை உதவியாளர் நிலையில் கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் பணிவரன்முறை செய்து ஆணையிடலாகிறது.

> "இப்பணிவரன்முறைதொகுதி— IVபணிநியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னைஉயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள இறுதி தீர்ப்பாணைக்குட்பட்டது."

04/07/2025

முதல்வர் (பொ),
அறிஞர் அண்ணா
அரசு கலைக் கல்லூரி,
நாமக்கல் - 637 002.
D.O. Code : CI-103

பெறுநர்
திருமதி, சு. பிரதீபா,
இளநிலை உதவியாளர்,
அறிஞர் அண்ணா அரசுகலைக்கல்லூரி,
நாமக்கல்.

நகல்
1. கல்லூரிக் கல்வி ஆணையர்,
 சென்னை—15.(அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பலாகிறது)
2. பணிப்பதிவேடு
3. உபரி— 2